ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 11 | டிசம்பர் – 2005 | கானம் : 5

www.madhuramurali.org









ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தி

இடம் : மதுராபுரி

தேதி : 02.11.2005







ஸ்ரீ ஹரி:

வேதபாடசாலை துவக்கம்

இடம் : ஸ்ரீ ஸாந்தீபனி

குருகுல சேவா ட்ரஸ்ட் (A.P),

ஹைதராபாத்.


தேதி : 08.11.2005





ஸ்ரீ துளசி கல்யாணம்

இடம் : மதுராபுரி, தேதி : 13.11.2005





# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319/03-05 | |
|---|---|---|
| வேணு : 11 | டிசம்பர் – 2005 | கானம் : 5 |




மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன்
யானை வாஹனத்தில் புறப்பாடு
இடம் : மதுரபுரி
தேதி : 02.11.2005


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;
e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 11 டிசம்பர் 2005 கானம் : 5

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 120 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 4 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 92 | 9 |
| 6. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 7 | 14 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 95 | 18 |
| 8. | வெற்றி பெறச் சிந்தியுங்கள் | 20 |
| 9. | வள்ளலாரின் கருணை | 21 |
| 10. | மாலே மணிவண்ணா! - 39 | 22 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 120 | 24 |


*சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேள்மினோ!*
*எந்நாவினில் கவியான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்*
*தெந்நாதநாவென்று வண்டுமுதல் திருவேங்கடத்து*
*என் ஆனை என்னப்பன் எம்பெருமான் உளனாகவே!*

**- திருவாய்மொழி 3-9-1**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : பீம்ப்ளாஸ் தாளம் : ஆதி

*பல்லவி*

*தவ சரணயுகளம் ஏவகதிர்மே*
*ப்ரேமிகவரத கோவிந்த! (தவ சரண)*

*சரணங்கள்*

*காருண்யஸிந்தோ குருமே கடாக்ஷம்*
*கஜேந்த்ரவரத கோவிந்த! (தவ சரண)*

*கோகுலரக்ஷக கௌஸ்துபதர*
*கோவர்த்தனதர கோவிந்த! (தவ சரண)*

*ப்ரிதஜனவத்ஸல ஸ்ரீவத்ஸலாஞ்ஜன*
*ஸ்ரீநிவாஸ காவிந்த! (தவ சரண)*

*நஹிமே பக்தி: நஹிமே ஶக்தி:*
*நஹிமே மார்க்க: சரணாகதம் வினா (தவ சரண)*

*மணிமயபூஷண மதுராநாயக*
*முரளீதரலாலித கோவிந்த! (தவ சரண)*

சிலர், அடிக்கடி பல சங்கல்பங்களை எடுத்துக் கொள்வார்கள். ஆனால், அவற்றில் தீவிரமாக நிற்காமல், அவைகளை விட்டுவிடுவார்கள். இப்படி பலமுறை சங்கல்பங்களை எடுத்துக்கொள்வதும், அவற்றிலிருந்து வழுவதும் சஞ்சலமான புத்தியையே காட்டுகின்றது.

— **ஸ்ரீ ஸ்வாமிஜி**

## 120

ஒருநாள், ஸ்ரீ ஸ்வாமிஜி பேசிக்கொண்டிருக்கும்பொழுது, பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணரைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணர், தீய செயல்கள் பல செய்தவர்களிடமிருந்து உணவுப் பொருள்களை வாங்கி சாப்பிடமாட்டார் என்றும், ஏன் என்றால், அது அவரை பாதிக்கும் என்பதையும், அதனால், அவர் பிறர் கொடுக்கும் உணவுப் பொருள்களை வாங்கி சாப்பிடுவதில் மிகவும் கவனமாக இருப்பார் என்பதையும் சொன்னார்கள். மேலும், ஸ்ரீ ஸ்வாமிஜி, அப்படி நாம் சாப்பிடும் உணவை பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு சாப்பிடவேண்டும் என்றும். அதாவது, உணவை மனதால் அர்ப்பணித்தாலும் கூடபோதும்; அதில் இருக்கக் கூடிய தீமைகள் விலகிவிடும் என்றும் கூறினார்கள்.

அப்பொழுது, இதைக் கேட்டுக்கொண்டிருந்த பக்தர் ஒருவர், ஸ்ரீ ஸ்வாமிஜியிடம், ''சில மஹான்கள், யார் எது கொடுத்தாலும் சாப்பிடுகின்றார்களே! அது எப்படி?'' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி, ''நாம் இறைவனுக்கு நிவேதனம் செய்யும்பொழுது, மந்திரங்களை உச்சரித்து, அந்த உணவில் இருக்கக்கூடிய குற்றங்களை விலக்கி, இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றோம். மந்திரங்களுக்கு இருக்கின்ற சக்தியைவிட அன்பிற்கு அதிகமான சக்தி உண்டு. அதனால்தான், ப்ரேம பூஜையில், அதாவது அன்புடன் செய்யக்கூடிய பூஜையில் மந்திர சடங்குகளுக்கு முக்கியத்துவம் கிடையாது. அதுபோலத்தான் ஒருவர், ஒரு உணவை மிகுந்த அன்புடன் உங்களுக்கு அளிக்கும்பொழுது அந்த அன்பானது அந்த உணவில் இருக்ககூடிய குற்றங்களை அறவே போக்கிவிடுகின்றது. வறட்டு ஹ்ருதயங்களுக்கு, அதாவது அன்பு என்றால் என்ன? என்று புரியாத ஹ்ருதயங்களுக்கு இது புரியாது'' என்று விளக்கம் கொடுத்தார்கள்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நம்முடைய மதத்தில் விதித்துள்ள சாஸ்திரங்களுடைய விதிகளுக்கான காரண கார்யங்களை நம்மால் கூறமுடியும். அப்படியிருக்க, அவற்றை அனுஷ்டிக்காவிட்டால் பாவம் வரும், நரகம் வரும் என்றெல்லாம் ஏன் கூற வேண்டும்? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், ஒரு துறவி, ஒரு கிராமத்தில், மூன்று இரவுகளுக்குமேல் தங்கக்கூடாது என்று துறவு தர்மம் கூறுகின்றது. ஏன் என்றால், அப்படி தங்கினால் அந்த ஊரில் வசிப்பவர்களுடன் அவருக்கு ஒரு பந்த பாசம் ஏற்பட்டுவிடும் என்பதுதான் அதற்கான காரணம். அப்படியிருக்க, இவைகளை கடைபிடிக்காவிட்டால் பாவம் வரும் என்று கூறுவானேன்!*

பதில் : விதிகளை ஏற்படுத்தியப் பிறகு, இதற்காகத்தான் இந்த விதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்று மட்டும் கூறிவிட்டால், பலர் என்ன நினைப்பார்கள் தெரியுமா? நான் அதே ஊரில் எவ்வளவு நாள் வேண்டுமானாலும் தங்குவேன். அதே சமயத்தில், என்னால் பந்தப்படாமலும் இருக்கமுடியும் என்று நினைப்பார்கள். ஆனால், பெரும்பாலோருக்கு இதெல்லாம் நடைமுறையில் இயலாத கார்யம். மேற்போக்காக பார்க்கும்பொழுது, நமக்கு சாஸ்திரங்கள் இதற்குத்தான் விதிக்கப்பட்டுள்ளது என்று தோன்றும். சாஸ்திரவிதிகள் நூற்றுக்கு 99.9% மக்களின் இயல்பை மனதில் வைத்துக்கொண்டுதான் இயற்றப்பட்டு உள்ளது.

*கேள்வி : இந்த உலகம் பொய் என்பதை எவ்வளவு படித்தாலும், கேட்டாலும் அதை மனது ஏற்றுக்கொள்ள மறுக்கின்றதே! ஏன்?*

பதில் : ஒருவர் மிகவும் நல்லவர்; நல்ல பண்பாளர்; நல்ல குணங்களை உடையவர்; வாழ்க்கையில் ஒருமுறைகூட பொய்யே சொல்லாதவர்; அறத்தின் வழியிலிருந்து வழுவாதவர் என்று வைத்துக்கொள்வோம்.

அப்படிப்பட்டவர், ஒரு முறை தப்பித் தவறி ஒரு பொய் சொன்னாலும் கூட, அதை உலகம் உண்மை என்றே நம்பும். அதுபோல், இந்த உலகத்தைக் காண்பிக்கக்கூடிய, அதாவது ஆதாரமாக இருக்கக்கூடிய ஆத்மா அவ்வளவு சத்தியமாக இருப்பதால், அதிலிருந்து பிரதிபலிக்கக்கூடிய உலகமும் அவ்வளவு சத்தியமாகத் தோன்றுகிறது.

*கேள்வி : சிலர், கோவில்களைக் கட்டிவிட்டு, அதை சரியாக பராமரிக்க ஏற்பாடு செய்யாமலும், பூஜைகள் ஒழுங்காக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யாமலும் விட்டுவிடுகின்றார்களே!*

பதில் : கோவில் கட்டுவது ஒரு புண்ய கார்யம்; அதை செய்தால் போதும் என்று நினைக்கின்றார்கள். புண்யத்திற்காக மட்டும் கோவில் கட்டவேண்டும் என்று பலர் இருப்பதால்தான் இந்த நிலை.

*கேள்வி : ஞானிகளை, சுகமோ, துக்கமோ, பாதிக்காமல் இருப்பது எப்படி?*

பதில் : நாம் நெருங்கிப் பழகி வருபவர்களுடைய சுக துக்கங்கள் நம்மை பாதிக்கின்றன. அவர்களுடன் நமக்கு மனக்கசப்பு ஏற்பட்டால் அவர்களுடைய சுகமோ, துக்கமோ நம்மை பாதிப்பதில்லை. அதேபோல், இந்த சரீரத்தின் மீதும் நமக்குப் பற்று அகலுமானால் அதற்கு ஏற்படும் சுகமோ, துக்கமோ நம்மை பாதிக்காது. ஆத்மானுபூதியிலே சதா திளைக்கும் ஞானிகள், சரீரப்பற்று சற்றும் இல்லாதவர்கள். அவர்களை சுகதுக்கங்கள் எப்படி பாதிக்கும்?

*கேள்வி : நம் இயல்பே ப்ரஹ்ம ஸ்வரூபம் என்பதை நம்மால் நம்ப முடியவில்லையே! ஏன்?*

பதில் : பொதுவாகவே, மனிதன் ஒரு அடி நிலம் இருந்தால், மேலும் ஒரு அடி நிலத்தை அடையவே விரும்புகிறான். அலெக்ஸாண்டர் போன்றோர்கள் பூமி முழுவதையும் ஆள விரும்பினார்கள். மேலும், ஒவ்வொருவரும் நீண்ட நாள் உயிர் வாழவே விரும்புகிறோம். அதேபோல், எல்லோருக்குமே எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு விடவேண்டும் என்ற ஆசையும் உள்ளது. ஆக, ப்ரஹ்மத்தின் இயல்பான சர்வவ்யாபித்வம் (எல்லா இடத்திலும் பரவியிருக்கும் தன்மை), நித்யத்வம் (எல்லா காலத்திலும் இருக்கும் தன்மை),

சர்வக்ஞத்வம் (எல்லா ஞானமும் அறிந்த தன்மை) இவற்றில் நம் எல்லோருக்குமே ஆசை இருக்கிறது. நமது நிஜஸ்வரூபம், ப்ரஹ்மமாகவே இருப்பதால்தான் நமக்கு இந்த ஆசைகள் உண்டாகின்றன.

*கேள்வி : பகவான் ஸ்ரீ ரமணர், ஆதிசங்கரர் போன்றோர்கள் வேதாந்த சாஸ்த்ரம் கற்காமலேயே ஆத்மானுபூதியை அடைந்திருக்கிறார்களே! அப்படியென்றால், வேதாந்த சாஸ்த்ரம் கற்பது, ஞானம் ஏற்படுவதற்கு மிகவும் அவசியம் இல்லை என்று தோன்றுகின்றதே!*

பதில் : எடிஸன், மேரிக்யூரி போன்ற விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலேதான் நமது இன்றைய விஞ்ஞான பாட புத்தகங்கள் அமைந்திருக்கின்றன. சாமான்ய மனிதனுக்கு ஸ்வயமாகவே இந்த அறிவியல் ஞானமெல்லாம் எவ்வாறு உண்டாக முடியும்? அவன் அந்த அறிவியல் புத்தகங்களைக் கற்று, அதைத் தெரிந்து கொள்கின்றான்.

பகவான் ரமணர், ஸ்ரீ சங்கரர் போன்றவர்கள் மெய்ஞானத்தை தாங்கள் உணர்ந்து, நமக்கு அதை வேதாந்தமாக அளித்திருக்கிறார்கள். நம்மைப் போன்ற சாமான்ய மனிதர்களுக்கு இவைகளைப் படிப்பதால்தான் வேதாந்த அடிப்படை ஞானம் ஏற்படுகின்றது. நமக்கு ஸ்வயமாக ஏற்படுவதில்லை. அதனால், வேதாந்த ச்ரவணம் போன்றவை நமக்கு அவசியமே!

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhuramurali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......" Mahamantra chanting rendered in various raagas and more.

# மாதம் ஒரு புத்தகம்

வடலூரில் வாழ்ந்து வந்த அருட்பிரகாச ராமலிங்க வள்ளலார் அவர்கள், உருவவழிபாட்டை ஏற்காதவர் என்றும், ஜோதி வழிபாட்டை வற்புறுத்தியவர் என்றும், பொதுவான ஒரு கருத்து பரவலாக நிலவி வருகின்றது. மு. பாலசுப்ரமணியன் அவர்களால் எழுதப்பட்டு, மலேசிய ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க குருகுல இயக்கத்தினரால் (சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், 92, நேரு தெரு, சென்னை - 87.) வெளியிடப்பட்டுள்ள **''வள்ளலார் வாழ்கிறார்''** என்ற நூலை சமீபத்தில் படிக்க நேர்ந்தது. இது வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்று நூல். இந்த நூலில் நான் படித்த ஒரு விஷயம் என்னை பிரமிக்க வைத்தது.

'ஒரு சமயம், கடலூரை அடுத்துள்ள திருப்பாதிரிபுலியூரில் ப்ரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவரான ஸ்ரீதரஸ்வாமிநாயக்கர் என்பவர் உருவவழிபாட்டைக் கண்டித்துப் பேசினார். அதனைக் கேட்ட மக்கள் பலர், குழப்பம் அடைந்தனர். அப்பொழுது, அதாவது 16-1-1867 அன்று, பெண்ணையாற்றங்கரையில் பல அறிஞர்கள் கூடியபோது, அங்கு வள்ளலாரும் வந்திருந்தார். ஸ்ரீதரஸ்வாமிநாயக்கரும் வந்திருந்தார். மக்கள் வள்ளலாரை அணுகி, தங்களுடைய குழப்பத்தைப் போக்கி அருளும்படி பிரார்த்திக்க, வள்ளலாரும் அவர்களுக்காக உருவ வழிபாட்டை ஆதரித்துப் பேசி, ஸ்ரீதர ஸ்வாமிநாயக்கரை வாதத்தில் வென்றார் என்பதே அச்செய்தி.

மேலும், விக்கிரகம் என்ற சொல்லுக்கு வள்ளலார் சொன்ன பொருள் மிகவும் ரசிக்கத் தக்கதாகவும் உள்ளது. விக்கிரகம் என்பதற்கு விசேட இடம் என்பதே பொருள். பிரம்மப்பிரகாசம் தேவதேகங்களாகி, விக்கிரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்க, பிரம்மப்பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு, அனுக்கிரகிக்கும் என்றும் பேசியுள்ளார்.

மேலும், அந்த புத்தகத்தில் வள்ளலார் இயற்றிய கீழ்வரும் பாடல் காணப்படுகின்றது.

*தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்*
*சிறுகுறும் என்றுளம் பயந்தே*
*நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே நண்ணினேன்*
*ஊர்ப்புறம் அடுத்த*

*காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்*
*களத்திலே திரிந்துற்ற இளைப்பை*
*ஏட்டிலே எழுதமுடியுமோ இவைகள் எந்தை*
*நீ அறிந்தது தானே!*

இந்தப் பாடலில் வள்ளலார் செல்வம் மிகுந்த சென்னையில் தங்கி இருந்தால் தனது உள்ளம் சிறுகுறுமோ என அஞ்சி, பலகாலம் சென்னையை விட்டு நீங்கிச் சுற்றுப் புறங்களிலுள்ள அமைதியான கிராமங்களிலே தங்கியிருக்கின்றார். சற்றேரக்குறைய நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பான சென்னை வாழ்க்கையை நினைத்தே அவர் இப்படி கருதியுள்ளார் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது.

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

---


ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள் :**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. | பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 3. | பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 4. | Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |
| 5. | நாம மஹிமை | Audio CD |

**கீர்த்தனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. | மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassette, Audio CD |

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs
kindly send e-mail to "publications@madhuramurali.org"

# எந்தரோ மஹானுபாவுலு - 92

பெரியவர் தனது சத்தியத்தை நிறைவேற்றுவாரோ என்று ப்ராஹ்மண இளைஞன் சிறிது காலம் பொறுத்துப் பார்த்தான். ஆனால், வெகுநாட்கள் ஆகியும், அவர் எதுவும் முயற்சி எடுக்கவில்லை என்றதும், பெரியவர் ஒருவேளை தன் வாக்கை மறந்துவிட்டாரோ என அவன் நினைத்து, அவருக்கு நினைவு படுத்தலாம் என்று எண்ணி அவரது வீட்டுக்குச் சென்றான். அவனைப் பார்த்ததுமே பெரியவரின் முகம் தொங்கிவிட்டது. ''வா அப்பா! எங்கே உன்னைக் காணவே காணோம்'' என்று வறட்சியாக வினவினார்.

சிறிது நேரம் பெரியவருடன் அளவளாவிவிட்டு இளைஞன், ''பெரியவரே! நீங்கள் ப்ருந்தாவனத்தில் கோபால்ஜிக்கு முன்பாக எனக்குத் தந்த வாக்குறுதியை மறந்துவிட்டீர்களா?'' என்று கேட்டான். பெரியவர் பதில் கூறுவதற்குமுன் அவரது பையன் கழியுடன் அங்கு வந்து, ''நீசனே! உனக்கு இத்தனை தைரியமா? எனக்கு மைத்துனன் ஆக, உனக்கு, என்ன தகுதி உள்ளது? உடனே வீட்டை விட்டு வெளியேறு. இல்லை என்றால் கழியால் உன் மண்டையைப் பிளந்துவிடுவேன்'' என்று இரைந்தான்.

இதைக்கேட்ட இளைஞன், மிகவும் வருத்தமடைந்தான். அவனுக்கு விவாஹம் ஆகவில்லை என்று வருத்தமில்லை. தன்னை அவமானப்படுத்திவிட்டார்களே! என்று மிகவும் துக்கப்பட்டான். ''எனக்கு அன்னை, தந்தை இருந்தால் இப்படி நேருமா? ஆனால், எனக்கு நேர்ந்த அவமானத்துக்கு அவசியம் பழி வாங்குவேன். மணந்தால் இவனது சகோதரியை மணப்பேன். இல்லையேல் உயிருடன் வாழமாட்டேன்'' என்று நிச்சயித்துக்கொண்டான். பஞ்சாயத்தைக் கூட்டினான். அவர்களிடம் நடந்த கதையை முழுவதும் கூறினான். ''நான் வேறெதுவும் விரும்பவில்லை. இந்தப் பெரியவர் துணிவுடன் பஞ்சாயத்து முன்பு கோபாலனை சாக்ஷி வைத்து, எனக்குத் தந்த வாக்குறுதியை இல்லை என்று மறுக்கச் சொல்லுங்கள்'' என்றான்.

பெரியவருக்கு, அவரது மகன் நன்றாக கற்பித்து, பஞ்சாயத்து முன்பு, ''எனக்கு ஒன்றும் நினைவில்லை என்று கூறிவிடுங்கள்.

இதனால் பொய் சொன்னதுபோலும் இருக்காது'' என்று கூறி இருந்தான். பெரியவரும், புத்திரபாசத்தால் கட்டுண்டு, மீறமுடியாமல், பஞ்சாயத்து முன், ''எனக்கு எதுவும் சரியாக நினைவில்லை'' என்று கூறிவிட்டார். உடனே அவரது பிள்ளையும், ''இந்தப் பையன் மிகவும் அதமன். என் தந்தை அப்போது உடன் யாருமில்லாமல் தனியாக இருந்ததை பயன்படுத்திக்கொண்டு, அவருக்கு மயக்கமருந்து கொடுத்து அவரிடமிருந்த தனத்தை எல்லாம் இவன் அபகரித்துக்கொண்டு விட்டான். போதாக்குறைக்கு இப்போது இப்படி அவர்மீது அபாண்டமாக பழி சுமத்துகிறான். என் தந்தை தன் மகளை இப்படிப்பட்ட பரம ஏழையான ஒரு அனாதைக்கு தருவதாக எப்படி வாக்களிப்பார்?'' என்று கேட்டான்.

பஞ்சாயத்து பெரியவர்கள், ''தம்பீ! பெரியவர் உனக்கு தன் பெண்ணைத் தருவதாக கூறியபோது யாராவது உடன் இருந்தவர்களா சாட்சியாக?'' என்று கேட்டனர்.

இளைஞன் கம்பீரமாக, ''கோபால்ஜியை சாக்ஷியாக வைத்துதான் இவர் வாக்குறுதி தந்தார். கோபாலனைத் தவிர வேறு யாரும் சாட்சி கிடையாது'' என்றான். பஞ்சாயத்தில் ஒரு பெரியவர் சிரித்துவிட்டு, ''நீ கோபாலனை இங்கு சாட்சி கூற அழைத்து வரமுடியமா?'' என்று கேள்வி கேட்டார். இளைஞன் மிகவும் ஆவேசமாக, ''நிச்சயமாக அழைத்துவர முடியும்'' என்று கூறினான். இதைக் கேட்டதும், சபையிலுள்ளவர்கள் திக்கித்துவிட்டனர். அவர்கள் ஆச்சர்யத்துடன், ''உன்னால் கோபால்ஜியை சாட்சி சொல்ல அழைத்துவர முடியும் என்றால், நாங்கள் பலவந்தமாக பெரியவரின் பெண்ணை உனக்கு கல்யாணம் செய்து தருவோம்'' என்று கூறினர்.

பெரியவரும், ''அதுதான் சரி. சாட்சி சொல்ல கோபால்ஜி வந்தானானால், என் பெண்ணை இவனுக்கு விவாஹம் செய்து வைக்கிறேன்'' என்றார். பெரியவருக்கு, பக்தவச்சலனான பகவான் தன் ப்ரதிஞையை பூர்த்திசெய்து வைக்கவும், இந்த ப்ராஹ்மண குமாரனனின் மானத்தைக் காக்கவும், கட்டாயம் சாட்சி சொல்ல வருவான் என்ற நம்பிக்கை உள்ளூர இருந்தது. ஆனால், அவருடைய மகனோ, ''நாம் நல்ல உபாயத்தை தேர்ந்தெடுத்துவிட்டோம்! கல்லாலான சிலை எப்படி சாட்சி சொல்ல வரும்? எனவே, என் தங்கையை இந்த ஏழைக்கு கல்யாணம் செய்துதரும் நிர்பந்தம்

எனக்கு ஏற்படப் போவதே இல்லை!'' என்று மனதில் திடமாக நினைத்து உரத்தகுரலில், ''எனக்கும் சம்மதம்தான். கோபால்ஜி மட்டும் வந்து இங்கு சாட்சி சொன்னால் என் தங்கையை இவனுக்குத் தருகிறேன்'' என்று கோஷம் செய்தான்.

இளைஞனும் இந்த உடன்படிக்கையை எழுதி, பஞ்சாயத்து, பெரியவர், அவரது மகன் ஆகியோரின் கையெழுத்தை வாங்கி வைத்துக்கொண்டு நம்பிக்கையுடன் ப்ருந்தாவனத்துக்குச் சென்றான். அங்கு கோபால்ஜியிடம் மிகுந்த பணிவுடன் தன் நிலையையும், கஷ்டங்களையும் எடுத்துக்கூறி, ப்ரார்த்தனை செய்துகொண்டு அவனை சாட்சி சொல்ல, வித்யாநகரம் வரும்படி அழைத்தான். பகவானும், பக்தனின் வேதனைக் குரலைக்கேட்டு, ப்ரத்யக்ஷமாகி அவனிடம், ''நீ செல்! நான் அங்கு தோன்றி உனக்காக சாட்சி சொல்வேன்'' என்று உறுதிமொழி தந்தார்.

இளைஞன், ''அதெல்லாம் சரியாக வராது. நீங்கள் எந்த ரூபத்திலாவாவது வந்து சாட்சி சொன்னால், அவர்கள் நம்பமாட்டார்கள். எனவே, இந்த சிலை ரூபத்திலேயே என்னுடன் நடந்து வரவேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டான். இறைவன், ''கற்சிலை எங்காவது, நடந்து வருமா? இது நடக்கக்கூடிய காரியமா?'' என்று கேட்டு சிரித்தான்.

இளைஞன் பகவானை விடுவதாக இல்லை - ''ப்ரபோ! உங்களுக்கு நடக்கக்கூடாத காரியம் என்று ஒன்று உண்டா? ஆகவே, நீங்கள் இப்படியே தான் வரவேண்டும்'' என்று சொன்னான். பகவான், பக்தனுக்கு கட்டுப்பட்டவன்! ''நீ முன்னால் செல். நான் உன் பின்னால் வருவேன். நீ திரும்பிப் பார்க்கக்கூடாது. நீ பார்த்துவிட்டால் நான் அங்கேயே நின்றுவிடுவேன்'' என்றார்.

பக்தன், ''நீ பின்னால் வருகிறாய் என்று எனக்கு எப்படி தெரியும்? பாதியில் நீ திரும்பிப் போனால் நான் என்ன செய்வேன்?'' என்று கேட்டான். இறைவன் கலகல என்று சிரித்து, ''என் காலில் உள்ள நூபுரத்தின் த்வனி உனக்கு கேட்கும். அதிலிருந்து நான் வருவதை நீ தெரிந்துகொள்ளலாம்'' என்றான்.

இளைஞனும் இதை ஏற்றான். அவன் முன்னே செல்ல, பின்னால் இறைவன், ''ஜல் ஜல்'' என்ற நூபுர ஓசையுடன் தொடர்ந்து வந்தான். வழியில், விதவிதமாக நைவேத்யம் வேளாவேளைக்கு செய்து இறைவனை ஆராதித்தான். வித்யாநகரத்துக்கு அருகில்

வந்துவிட்டனர். நகரத்துக்கு சமீபத்தில் வந்தவுடன் இளைஞனுக்கு திடீரென்று ஒரு ஆவல் ஏற்பட்டது. கோபாலன் தன் பின்னால் வருகிறானா என்று பார்த்து விடுவோம் என்ற தீவிரமான உந்துதலால் தன் பார்வையைப் பின்னால் செலுத்தினான். அவ்வளவுதான்! பகவான் சிரித்துக்கொண்டே, அங்கு தோன்றி, ''அவ்வளவுதான்! இனி நான் இங்குதான் இருப்பேன்! இங்கிருந்தே சாட்சி கூறுவேன்! நீ மக்களை இங்கு அழைத்து வா!'' என்று கூறிவிட்டான்.

பகவானின் ஆணையைக் கேட்ட ப்ராஹ்மண குமாரன், கிராமத்தை அடைந்து மக்களிடம், கோபால்ஜி பகவானின் லீலையைப் பற்றிக் கூறி அவர்களை தன்னுடன் வருமாறு அழைத்தான். அதைக் கேட்ட மக்கள் ஆர்வத்துடன் பகவானை தரிசனம் செய்ய ஓடினர். பகவானைக் கண்டு அவனை விழுந்து வணங்கினார்கள். பகவானுக்கு விதவிதமான பொருட்களை நிவேதனம் செய்தனர். யாருக்கும் அவனிடம் சாட்சி சொல்லுமாறு கேட்க தைரியம் வரவில்லை! அவனது தரிசனத்தினால் பரமானந்தம் அடைந்தனர். பெரியவரின் மகனே ஆச்சர்யமடைந்து மனமகிழ்ந்து தன் தங்கையை ப்ராஹ்மண குமாரனுக்கு விவாஹம் செய்து வைத்தான். இந்தக் கதையை அறிந்த அந்த தேசத்து மன்னன் பகவான் கோபால்ஜிக்கு ஒரு பெரியக் கோவிலை கட்டித்தந்தான். பெரியவரும், இளைஞனும், கோபால்ஜிக்கு பூஜை, சேவை ஆகியவை செய்து வாழ்நாளை கழித்தனர். அப்பொழுதிலிருந்து, கோபாலனுக்கு ''சாக்ஷி கோபால்'' என்ற பெயர் ஏற்பட்டது. அவன் மிகவும் ப்ரஸித்தியானான்.

நித்யானந்தர், இந்தக் கதையைக் கூற, மஹாப்ரபு மிகவும் கவனத்துடன் அதைக் கேட்டார். கதை முடிந்ததும் நித்யானந்தர் மௌனமானார். மஹாப்ரபு, ''வித்யா நகரத்திலிருந்து பகவான் இங்கு எப்படி வந்தார்? அதையும் எங்களுக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார்.

நித்யானந்தர் ஆரம்பித்தார் - 'அந்தக் காலத்தில் ஒரிஸ்ஸா தேசத்தில் பரமபாகவதனான மஹாராஜா புருஷோத்தமதேவன் அரசாட்சி செய்துவந்தான். அவன் வித்யா நகரத்து ராஜாவின் புதல்வியை விவாஹம் செய்துகொள்ள விரும்பினான். வித்யா நகரத்து ராஜா, ''நான் என் மகனை கோவிலைப் பெருக்கும் ஒருவனுக்கு கல்யாணம் செய்துதர மாட்டேன்'' என்று நிராகரித்து விட்டான். இதனால் கோபமடைந்த புருஷோத்தமதேவன், வித்யா

நகரத்தின் மீது படை எடுத்தான். பகவான் ஜகன்னாதனின் அருளால் வெற்றி அடைந்தான். வித்யா நகரத்தை தன் ராஜ்யத்துடன் இணைத்து ராஜகுமாரியை விவாஹம் செய்துகொண்டான். அப்போது, பகவான் சாட்சி கோபாலனை பூரிக்கு எழுந்தருளுமாறு ப்ரார்த்தித்துக்கொண்டான். மஹாராஜாவின் பக்தி **பா**வத்தால் ஆனந்தமடைந்த கோபாலன், புரிக்கு வந்தார். ஜகன்னாத்ஜியின் கோவிலிலேயே மாணிக்க சிம்மாசனத்தில் கோபாலன் அமர்ந்திருந்தான். ஜகன்னாத்ஜி ஏற்கனவே அங்கு எழுந்தருளி இருந்ததால் புதிதாக வந்த கோபாலனுக்கும், அவருக்கும் இடையே ப்ரேம கலஹம் ஏற்பட்டது! இருவரையும் ஒரே இடத்தில் வைத்திருப்பது சரியல்ல என்று ராஜாவுக்குத் தோன்றி, புரியிலிருந்து மூன்று கோசம் தள்ளி இருந்த சத்யவாதி என்ற கிராமத்துக்கு அருகில் சாக்ஷி கோபாலனை ப்ரதிஷ்டை செய்து, கோவில் கட்டினான். அந்த கோபாலன்தான் இவன்' என்று கதையை முடித்தார்.

கோபாலனின் மஹிமை அளவில்லாதது. ஒருமுறை இவனை தரிசிக்க வந்த ஒரிஸ்ஸா தேசத்து மஹாராணி, பகவானில் அழகில் சொக்கிப்போய், ''பகவானுக்கு மூக்கு குத்தி அங்கு துளை இருந்தால் என் விலையுயர்ந்த மூக்குத்தியை அவனுக்குத் தருவேனே!'' என்று நினைத்தாள். அடுத்த நாளே பகவான் சாக்ஷி கோபால், ராணியின் கனவில் தோன்றி, ''மஹாராணி! நான் உன் ஆசையை நிறைவேற்றுகிறேன்! பூஜாரிகளுக்கு என் மூக்கில், மூக்குத்தித் துளை இருப்பது தெரியாது! நீ நாளை அவர்களுக்கு என் மூக்கில் துளை இருப்பதை தெரிவித்துவிட்டு உன் மூக்குத்தியை எனக்கு சமர்ப்பித்து அலங்கரித்து பார்த்து ஆனந்தப்படு!'' என்று கூறினான்.

அடுத்தநாள் காலை, மஹாராணி, தன் கனவை ராஜாவிடம் கூறினாள். உடனே, ராஜா கோவிலுக்குச் சென்று பகவானின் மூர்த்தியில் மூக்குத்தித் துளை இருப்பதைப் பற்றி புஜாரிகளிடம் சொல்ல நிஜமாக அப்படியிருக்கக் கண்டனர். மஹராராணி, மிகவும் அன்புடன் தன் விலையுயர்ந்த முத்து மூக்குத்தியை கோபாலனுக்கு அணிவித்து ஆனந்தமடைந்தாள். கதையைக் கேட்ட மஹாப்ரபு அன்பு மேலீட்டால் பரவசமடைந்தார். கோபாலனின் மூர்த்தியை தியானித்துக்கொண்டே அன்று இரவைக் கழித்தார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 7

**– குடந்தை என். இராமசர்மா**

கண்ணனெனும் கருங்கடல் முப்பரிமாணமுடைய ஒரு முக்கடலின் ஸங்கமம். கருணைக்கடல் ஒருபுறம், வடிவழகின் வண்ணக்கடல் ஒருபுறம். எல்லையிலா குணக்கடல் மற்றொருபுறம்.

தெரிந்தோ, தெரியாமலோ, இந்த ஸங்கமக் கடலில் இறங்கி விட்டேன். இறங்கிய பிறகுதான் இது ஒரு ப்ரேம ஸமுத்ரமென்று தெரிந்தது. அலைகள் எல்லா பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு என்னை அலைக்கழைப்பதை யாரிடம் சொல்வேன்! எப்படிச் சொல்வேன்! திக்குமுக்காடிப் போகிறேன் என்கிறார் - பகவத் பாதர்.

கடலில் ஒரு அலை, மற்றொரு அலையில் தள்ளுவது போல் ஒரு அழகு, மற்றொரு அழகில் தள்ளுகிறது, ஒரு குணம், மற்றொரு குணத்தில் தள்ளுகிறது. திருமேனியழகும், திருக்குணங்களின் அழகும் கண்டு அனுபவிக்கிறார். அழகனின் அழகுக்கு ஒப்பு ஏது? உவமை ஏது?

எங்கும் கடல், எங்கும் அழகு. அழகின் சிலிர்ப்பு. யாவும் கண்ணன். கண்ணனில் விரிவும், கண்ணனில் ஒடுக்கமும் காண்கிறார். முதலில், கோவிந்தாகாரமான விருத்தி மட்டும் இருந்தது. இப்பொழுதோ, ப்ரேம ரஸத்தின் எல்லையில் அந்த விருத்தியும் கூட கோவிந்தனில் கரைந்துவிடுகிறது.

கண்ணனே எல்லாம். காணுமிடமெங்கும் கண்ணனைத் தவிர வேறில்லை. ஆனந்த ப்ரும்மத்தின் பேரானந்த சொரூபம். அதில் இணைய ஆனந்தமே எஞ்சுகிறது. இந்த ஆனந்த அனுபவத்தை எப்படி நான் வார்த்தைகளில் சொல்வேன்! என்கிறார்.

तस्मिन्ननुभवतिमनः प्रगृह्यमाणं परात्मसुखम् ।
स्थिरतां याते तस्मिन् याति मदोन्मत्तदन्तिदशाम् ॥

*தஸ்மிந் அநுபவதி மந: ப்ரக்ருஹ்யமானம் பராத்மஸுகம் ।*
*ஸ்த்திரதாம் யாதே தஸ்மிந் யாதி மதோந்மத்ததந்திதஸாம் ॥*

இவ்வாறு, எங்கும் பரமாத்ம தத்துவத்தையே காணுகின்ற அகண்டாகார விருத்தி (எண்ண அலை) எழுந்தபின், 'காலும் எழா கண்ண நீரும் நில்லா' என்றபடி ப்ரேம பக்தியிலே பூரித்து நிற்கிறான் முக்தன். தன்னில் தான் ஆழ்ந்து விடுகிறான். 'நான்' எனும் தனித்த உணர்வு கண்ணனில் கரையக் காண்கிறான். கண்ணன் குழலும், கண்ணன் கழலும் தவிர, எண்ணத்தில் எதுவுமில்லையது **நந்தநாங்க்ரி யுகளத்யான அவதாநார்த்திநாம்.**

இதுவே பிறவி, **'க்ருஷ்ண த்ருஷ்ணா ஜன்மமே ஜன்மம்'**. வ்ருஷ்ணி குலநாதன் க்ருஷ்ணனை அறியவேண்டும். அனுபவிக்க வேண்டும். அவனோடு இரண்டறக் கலக்கவேண்டும் என்ற த்ருஷ்ணை (ஏக்கம்) ஒன்று மட்டும் நெஞ்சில் இடைவிடாமல் எழும் நிலையே 'ப்ரேம பக்தி' என்கிறார்.

சந்திரனைக் கண்டதும், கடல் பொங்குகிறது. க்ருஷ்ண சந்திரனையே அகத்திலும், புறத்திலும் காணும் பேறுபெற்ற நெஞ்சமும் பூரிப்பில், ப்ரேமபக்திப் பெருக்கில் பொங்குகிறது. ப்ரேமரஸமாக, ப்ரேமவாஹினியாக உலகைப் பாவனமாக்கப் பெருகுகிறது.

ஞானமும், பக்தியும், வைராக்யமும் ஒருங்கிணையும் திரிவேணி ஸங்கமமே ப்ரேம பக்தி. ஸ்தூலவாஹினியான வைராக்யமாகிற யமுனையும், அந்தர்வாஹினியான ஞான ஸரஸ்வதியும் பக்தி கங்கையில் இணைந்துவிடுகின்றன. ப்ரேமகங்கை பெருகுகிறது. இது 'அவிநாசி' எனப்படும் முக்தி ஸ்தலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இதுவே, ஆனந்தகங்கை. ஆசார்யாளின் அறிவில் பெருகும் ஞான கங்கை.

இவள், ஒரு 'த்ரிபதகா'! மனம், வாக்கு, காயம் மூன்றிலும் சதா பிரவஹித்துக்கொண்டிருப்பாள். சமாதிநிலை, வ்யுத்தான நிலை (சமாதி கலைந்து எழுந்துவரும்) ஆகிய இரு கரைகளையும் அணைத்துக்கொண்டு ஓடிக்கொண்டேயிருப்பாள்.

கண்ணன் திருவடியிலிருந்து புறப்பட்ட இந்த ப்ரேமகங்கை, திரும்ப யதாஸ்தானத்தை அடையும் வரையில் உலகிற்கு நன்மை செய்யவென்று ஓடிக்கொண்டிருப்பாள். வாருங்களேன்! இந்த ப்ரேமகங்கையில் நீராடலாமே! **ஆச்ரித மாத்ரம் புருஷம் ஸ்வாபிமுகம் கர்ஷித ஸ்ரீமஸ: ॥**

நினைக்கப்படும் பொருள், நினைப்பு, நினைப்பவன் ஆகிய மூன்றும் இணைந்தது தியானம். 'த்ரிபுடி' என்று பெயர். நினைப்பும், நினைப்பவனும் நினைக்கப்படும் பொருளில் ஒன்றாகக் கலந்துவிடுவது சமாதி. இதுவே ப்ரேமபக்தி.

तद्वत् व्रजतां पुंसां दृग्वाङ्मनसामगोचरोऽपिहरिः ।
कृपया फलत्यकस्मात्सत्यानन्दांमृतेन विपुलेनः ॥ (257)

*தத்வத் வ்ரஜதாம் பும்ஸாம் த்ருக்வாங் மநஸாம் அகோசரோபி ஹரி: ।*
*க்ருபயா பலத்யகஸ்மாத் ஸத்யா நந்தாம்ருதேநவிபுலேந: ॥*

என் கண்ணன், கண்களுக்குப் புலனாகாதவன்தான், வாக்கிற்கு எட்டாதவன்தான், அறிவினால் அறியப்பட முடியாதவன்தான். இருக்கட்டுமே! முன்னால் சொல்லப்பட்ட 'ஸ்தூலபக்தி'யின் முறையான பயிற்சியால் 'சூக்ஷ்மபக்தி'யான ப்ரேமரஸம் மேலோங்கி, அருவியாகி, ஓடையாகி, நதியாகி, மஹாநதியாகப் பெருகுகிறது. புண்ணியம் பெருக்கி, பாவம் நீக்கும் ப்ரேமகங்கையாகிறது. எல்லோரும் நீராட வாருங்கள் என்கிறார். **ஹரிபத பாத்ய தரங்கிணி கங்கே... தூரீகுரு மம துஷ்க்ருதி பாரம், தவ க்ருபயா பவ ஸாகர பாரம்.**

பிறவியைச் சரி செய்யும் 'ஹரிபதவாஹினீ' இவள். எப்போதும் குளிர்ச்சி. எப்போதும் ஆனந்தம். எப்போதும் தெளிவு. எப்போதும் க்ருஷ்ண த்ருஷ்ணை. தன்னை நோக்கி ஓடிவரும் கங்கையைக் கடலரசன் எதிர்வந்து, தழுவி அணைத்துத் தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொள்கிறான். ப்ரேமரஸத்தில் பூரித்துத் தன்னை நோக்கி ஓடிவரும் பக்தனை கண்ணன் ஓடிவந்துத் தழுவி அணைக்கிறான். தன்னோடு இணைத்துக்கொண்டு விடுகிறான்.

ப்ரேமபக்தியும் மூன்று நிலைகளில் வெளிப்படுகிறது என்கிறார். ஸ்ரீ க்ருஷ்ண ஸங்கமம் வரையில் முதல் நிலை. ஸ்ரீ க்ருஷ்ண சௌந்தர்யத்தில் மூழ்கியிருப்பது, திளைப்பது இரண்டாவது நிலை. தேவவாஹினியான கங்கை, ஸ்ரீ பரமேச்வரன் ஜடையில் இறங்கித் தங்கினாள். பகீரதனின் முயற்சியால் புவி வாழப் புறப்பட்டாள். உத்தம பக்தன் மூலம் ப்ரேமசமாதியிலிருந்து எழுப்பப்படும் ப்ரேமபக்தன் ஸ்ரீ க்ருஷ்ண சங்கமத்திலிருந்து எழுந்து, உலகை வாழ்விக்கப் புறப்படுகிறான். இதுவே, மூன்றாவது நிலை. இதுவே 'பரா' நிலை. மிக உயரிய அனுபவ நிலை.

பரா நிலையில் பேதம் மறைகிறது. போதம் பெருக்கெடுத்துப் பாய்கிறது. 'போதம் போதம் ப்ரபோதம்' என்று இது க்ருஷ்ண போதமாக, ஆத்மபோதமாக மலர்கிறது. ஞானமலர்ச்சியின் பக்திப் பெருக்கு இது. அமர வாழ்வளிக்கும் அமுதப் பெருக்காதலின் 'ப்ரபோதஸுதா' நம்மைப் பருகச் செய்து, தேவ ஜீவனம் பெறச் செய்வது 'ப்ரபோதஸுதாகரம்'. ப்ரேமக் கடலில்தான் எத்தனை ஞான முத்துக்கள். இவை, கானமிசைக்கும் ஞான முத்துக்கள். கானம் தொடரும்!

... வளரும்.


ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்ற பெயரில் மட்டுமே M.O. or D.D. ஆக அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : ஆயுள் சந்தா ரூ. 1000/- (20 வருடங்கள்)
  வெளி நாடு : வருட சந்தா ரூ. 300/-
- சந்தாவை காசோலையாக அனுப்ப வேண்டாம்.
- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address labelல் இரண்டாம் வரியில் உள்ளது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.
- மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

**''மதுரமுரளி''**, குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875 email ID : publications@madhuramurali.org

# பாலகர்களுக்கு ஒரு கதை - 95

கோபாலன், ஒருநாள் தனிமையில் அமர்ந்து, அழுது கொண்டிருந்தான். அவன், தனிமையில் அமர்ந்து அழுவதை அவனுடைய ஆசிரியர், குமரேசன் பார்த்தார். கோபாலன், மிகவும் நன்றாக படிப்பான். நல்ல அறிவாளி. ஒழுக்கமாகவும் நடந்து கொள்வான். அவன் அழுவதைப் பார்த்து மிகவும் கவலை அடைந்த ஆசிரியர், ''அவனை அன்பொழுகத் தழுவி, ஆறுதலுடன் பேசலானார். குழந்தாய்! ஏன் அழுகின்றாய்? உனக்கு என்ன கவலை? யாராவது உன்னை அடித்தார்களா? அல்லது யாராவது உன்னைக் கண்டித்தார்களா? என்ன காரணம்?'' என்று கேட்டார். அதற்கு அவன் பதில் சொல்ல முடியாமல் விம்மி, விம்மி அழுதான்.

அப்பொழுது அவர் அவனை சமாதானப்படுத்தி, அவனுடைய கவலையைத் தெரிவிக்கச் சொன்னார். அதற்கு அவன், ''எனக்கு அதிகமாக கோபம் வந்துவிடுகின்றது. அப்படி வரும்பொழுது, நான் உணர்ச்சி வசப்பட்டு, என்னை அறியாமல் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்திவிடுகின்றேன். பிறகு, அதை உணர்ந்து, அதற்காக வருந்துகின்றேன். இப்படி கடுமையாக நான் பேசிவிடுவதால், எல்லோரையும் வருத்தத்திற்கு உள்ளாக்கிவிடுகின்றேன்'' என்றான்.

அதைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த ஆசிரியர், அவனுக்கு அறிவுரை கூறலானார். ''கோபாலா! மனிதன் என்பவன் உணர்வு மயமானவனாகத்தான் இருக்கவேண்டும். அப்படி, உணர்வு இல்லாதவன் மனிதனாகமாட்டான். வானத்தைப் பார்த்து அதில் உள்ள விண்மீன்களையும், பௌர்ணமி சந்திரனையும் ரசிக்கத் தெரிய வேண்டும். இனிமையான கவிதையை, சங்கீதத்தை ரசிக்கத் தெரியவேண்டும். ஓடுகின்ற ஆற்றை, விழுகின்ற அருவியை ரசிக்கத் தெரியவேண்டும். பறவைகளின் ஒலியை, மலைகளின் அழகை, செடிகொடிகளின் வனப்பை, மலர்களின் மென்மையை ரசிக்கத் தெரியவேண்டும். அப்படி அழகான உணர்வு உள்ளவன்தான் கவிஞனாக, எழுத்தாளனாக, ஓவியனாக, சங்கீத வித்வானாக, இசைவானனாக, பரிமளிக்க முடியும். அல்லது நல்ல ரசிகனாகவாவது

இருக்கமுடியும். நாம் குழந்தையைக் கொஞ்சும்பொழுதும், தாய் தந்தையரிடமும், ஏழைகளிடமும், நோயால் துன்பப்படுபவர்களிடமும் உணர்வுப் பூர்வமாக அணுகவேண்டும். ஆனால், அதே சமயம் கோபம், பொறாமை, போட்டி, வெறுப்பு போன்ற எதிர்மறையான விஷயங்களில், உணர்வுமயமாக செயல்படக்கூடாது. அப்பொழுது விவேகத்துடன் உணர்வுகளை அடக்கி, கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். இதற்கு, முறையான இறைவழிபாடும், தியானமும், மூச்சுப்பயிற்சியும் உதவும் என்றும், அவைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் சொல்லிக்கொடுத்தார். அவற்றைப் பின்பற்றி, அவன் எதிர்காலத்தில் மிகப்பெரியப் பலனை அடைந்தான்.

**– பம்மல் பாலாஜி**

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ சாந்தீபனி குருகுல சேவா ட்ரஸ்ட் (A.P.)**

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அனுக்ரஹத்துடன் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஸ்ரீ N. ரவிச்சந்திரன், ஸ்ரீமதி ஸ்ரீலதா ரவிச்சந்திரன் தம்பதியினர் (Chartered Accountants) சுயமுயற்சியினால், ஸ்ரீ சாந்தீபனி குருகுல சேவா ட்ரஸ்ட் (A.P.) சார்பில் வேத பாடசாலை, நவம்பர் 8-ஆம் தேதி அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நமது பாடசாலையில் தேர்ச்சிப் பெற்ற ஸ்ரீ ராகவேந்த்ரசர்மா, இந்த பாடசாலைக்கு அத்யாபகராகப் பொறுப்பேற்றுள்ளார். மேலும் விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியைத் தொடர்புகொள்ளவும்.

Sri Sandeepani Gurukula Seva Trust (A.P.)

*Regd. Office :*
2nd Floor, Shyam Apartments, 6-3-563/F
Erramanzil, Hyderabad - 500 082.

**TRUSTEES**

Sri. N. Ravichandran/Smt. Srilatha Ravichandran
Ph : 040-23315150/040-23392758/98480-24928
email : lataravi@hotmail.com

# வெற்றி பெறச் சிந்தியுங்கள்

உங்களுடைய வாழ்க்கையின் மீதி நாட்களை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களுடைய வாழ்நாட்களின் எண்ணிக்கை அட்டவணையை கவனமாகப் படியுங்கள். நீங்கள், எழுபது வயது வரை உயிர் வாழ்வதாக வைத்துக் கொண்டு, இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

| உங்கள் வயது | கழிந்த நாட்கள் | இருக்கின்ற நாட்கள் |
|---|---|---|
| 20 வயது | 7,300 நாட்கள் | 18,250 நாட்கள் |
| 25 வயது | 9,125 நாட்கள் | 16,425 நாட்கள் |
| 30 வயது | 10,950 நாட்கள் | 14,600 நாட்கள் |
| 35 வயது | 12,775 நாட்கள் | 12,775 நாட்கள் |
| 40 வயது | 14,600 நாட்கள் | 10,950 நாட்கள் |
| 45 வயது | 16,425 நாட்கள் | 9,125 நாட்கள் |
| 50 வயது | 18,250 நாட்கள் | 7,300 நாட்கள் |
| 55 வயது | 20,075 நாட்கள் | 5,475 நாட்கள் |
| 60 வயது | 21,900 நாட்கள் | 3,650 நாட்கள் |
| 65 வயது | 23,725 நாட்கள் | 1,775 நாட்கள் |
| 70 வயது | 25,550 நாட்கள் | --- |

இதுவரைக் கழிந்த நாட்களை, நீங்கள் புத்திசாலித்தனமாகத்தான் செலவழித்தீர்களா? என்று சிந்தியுங்கள். அதைவிட முக்கியமான கேள்வி, உங்களுடைய வாழ்க்கையின் மீதி நாட்களை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? என்பதுதான். நமது வாழ்நாள் குறுகியது. ஆகவே, வாழ்கின்ற காலத்தை நமக்கு சாதகமான முறையில் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எந்தத் துறையில் உங்களது முழுத்திறமையையும் வெளிப்படுத்தமுடியும் என இன்றைக்கே தீர்மானம் செய்துகொள்ளுங்கள், ஏதோ ஒரு இடத்தில், ஆரம்பித்துதான் ஆகவேண்டும். நீங்கள் எங்கே இருந்தீர்கள் என்பதைவிட, எங்கே இருக்கிறீர்கள் என்பதைவிட, நீங்கள் எங்கு சென்று அடைய விரும்புகிறீர்கள் என்பதுதான் முக்கியம். அதனால் இப்பொழுதே செயல்படத் துவங்குங்கள்!

நன்றி : **சிவானந்த யோகம்**, அக்டோபர், நவம்பர் 2005 இதழ்

# வள்ளலாரின் கருணை

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

சாதனைகளில் ஈடுபட்டு, இறைவனை அடையத் துடிக்கும் மஹான்களுடைய ஹ்ருதயம், நாளுக்குநாள் அதிக மென்மையாகவும் நுண்ணுர்வுடனும் கூடியதாக ஆகிவிடும். எந்த அளவிற்கு அது மென்மையாக ஆகிவிடும் என்றால், அவர்களால், சிறிய சப்தம் போன்றவைகளைக் கூடத் தாங்கமுடியாது. அவர்கள் மனது, அந்த நிலையில் எத்தகைய பாடுபடும் அதாவது தவிக்கும் என்பது அவர்களுக்கே புரியக்கூடிய ஒன்று. அவர்களுக்கு, யாராவது குரல் உரத்துப் பேசினால், கதவை ஓங்கிச் சாத்தினால், இருவர் சண்டையிட்டுக்கொண்டால், யாராவது அழுதால் இவைகளை எல்லாம் அவர்களால் தாங்கிக்கொள்ளவே முடியாது. வடலூர் ஸ்ரீ ராமலிங்கவள்ளலார் இத்தகைய ஒரு நிலையை அழகாக ஒரு பாடலில் இறைவனிடம் முறையிடுவதுபோல் பாடியுள்ளார்.

அந்த பாடலானது,

*உரத்தொருவருக்கொருவர் பேசியபொழுது*
*உள்ளகம் நடுங்கினேன் பலகால்*
*கரத்தினால் உரத்துக் கதவு தட்டியபோது*
*ஐயவோ கலங்கினேன் கருத்தில்*
*புரத்தில் அம்மா அப்பனே ஐயோ*
*எனப் பிறர் புகன்ற சொல் புகுந்தே*
*தரத்தில் என் உள்ளத்தைக் கலக்கிய கலக்கம்*
*தந்தை நீ அறிந்ததுதானே!*

யாராவது உரத்த குரலில் பேசினாலோ, வீட்டுக் கதவை வேகமாகத் தட்டினாலோ, அதுபோல் யாராவது அம்மா, அப்பா, ஐயோ என்று அலறினாலோ, என் உள்ளம் கலங்கியது. எனது கலக்கத்தை, தந்தையான நீ அறிந்த ஒன்றுதானே! என்று அழகாக எடுத்துரைக்கின்றார்.

# மாலே மணிவண்ணா - 39

**- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்**

பகவானின் வ்யூஹ நிலையில் நான்காவது நிலையே அநிருத்தர் ஆகும். இந்நிலையைப் பரிபாடல் ‘பைங்கண் மால்’ என்று குறிப்பிடுகிறது. திருமாலுக்குக் காத்தல் தொழில் என்பது சிறப்பு வகையால் அமைந்ததாகும். படைப்பிற்கு அயனாகவும், அழிப்பிற்கு அரனாகவும் அவரே அத்தொழில்களையும் செய்கிறார். ஆயினும், தானாகவே இருந்து காத்தல் தொழிலையும் செய்கிறார்.

ஸங்கர்ஷணர் ஆக இருந்து ஸம்ஹாரத்தையும், ப்ரத்யும்னராக இருந்து படைப்பையும், அநிருத்தராக இருந்து காத்தலையும் வ்யூக நிலையில் பகவான் செய்கிறார் என்பது நாம் முன்பே அறிந்தோம்.

அநிருத்தர் என்பதன் பொருளை மேலும் விளக்கிக் கொண்டால் அவரைப் பரிபாடல் மூலமூர்த்தியின் பெயராகிய ‘மால்’ என்னும் பெயரால் அழைத்த நுட்பம் விளங்கிவிடும். பகவான் வ்யூஹ நிலையில் இருந்து அவதார நிலைக்கு எழுந்தருளுகிறபோது அதற்கு நெருக்கமானவர் அநிருத்தரே ஆவர்.

அநிருத்தர் என்பதற்குத் தடைபடாதவர் என்பது பொருள். பகவான் ராமன், கிருஷ்ணன் என்று பல வடிவங்கள் எடுத்து அவதாரப் பணிகளை நிறைவேற்றி உலகைக் காத்தருளுகிறபோது அவரை எந்த ஒரு சக்தியாலும் தடுத்து நிறுத்த முடிந்ததில்லையே! அப்படி யாராலும் எதனாலும் தடைபடாத சக்தி உள்ளவர். அளவற்ற செயலாற்றல் உள்ளவர் என்பதை அநிருத்தர் என்பதன் கருத்தாகும்.

அவதாரம் என்று சொன்னால் அது பகவானின் காத்தல் தொழிலின் பேராற்றல் உலகில் சாமான்யருக்கும் புலனாகின்ற இடம் அல்லவா?

*‘‘அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்*
*திறம் தெரிந்து, உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்*
*இறந்து உக நூறித் தக்கோர் இடர் துடைத்து, ஏக ஈண்டுப்*
*பிறந்தனன்; தன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்*

என்றார் கம்பர்.

அவதார சீலத்தால் ஆருயிர்களைக் காக்க எழுந்தருளுகிற எம்பெருமான் அறத்தை உலகின் எல்லா இடங்களிலும் நிலைபெறச் செய்கிறான். வேதமார்க்கமாகிய நீதியின் கூறுபாடுகளை அறிந்து உலகம் மேற்கொள்ளும்படி உலகை நேரிய வழியில் செலுத்துகிறான். இதற்கு இடையூறாக இருக்கும் தீயோரை அழிக்கிறான். நல்லவர்களின் துயர்களைத் துடைக்கிறான். இதற்காகவே அவதாரம் எடுக்கிறான் என்று கம்பர் சொல்வதைக் கவனித்தால், 'அநிருத்தர்' என்கிற வ்யூஹ நிலையின் விரிவின் ஒரு பகுதியே அவதாரம் என்பதும் ஆகும் என்று தெரிகிறது. அதனால்தான் மூலமூர்த்தியாகிய 'மால்' என்ற பெயரால் 'அநிருத்தரை'க் குறித்து அவரது தடையுறாத பேராற்றலைப் பரிபாடல் நினைப்பூட்டியது.

*'அநிருத்த: ஸ ஈசாந: வ்யக்தஸ் ஸர்வேஷு கர்மஸு'* (பாரதம்-சாந்திபர்வம்) திவ்யக்ஷேத்திரங்களில் அநிருத்தராகக் காட்சி தருபவர். தானும் தடைபடாமல் தன் பக்தர்களின் பணிகளில் தடைநேராமல் காப்பவர் அநிருத்தரே! எனவே, அவதாரத்தை அடுத்து அர்ச்சாமூர்த்தியாக வருபவரும் காத்தல் தொழிலை மேற்கொண்ட அநிருத்தரே யாவர். (தொடரும்)

---


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில்**

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O, படப்பை P.O

*2005 டிசம்பர் 16-ஆம் தேதி முதல் 2006 ஜனவரி 13-ஆம் தேதி வரை ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாசபெருமாள் திருக்கோயிலில் தினமும் காலை 4.30 மணிக்கு தனுர்மாத பூஜை நடைபெறும்.*

தினசரி கட்டளை : ரூ. 150/-

கோயில் தரிசன நேரம் :

காலை 4.30 மணி முதல் காலை 9.30 மணி வரை
மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

01.01.2006 காலை 10.00 - மாலை 6.00 அகண்ட நாம கீர்த்தனம் நடைபெறும். பக்தர்களின் சேவைக்காக அன்று பகல் முழுவதும் ஸந்நிதி திறந்திருக்கும்.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 120

*தொட்டருட் கைமெய் கட்டிடாய் எனிலியான்*
*நட்டமாவேன் அருள் அருணாசலா*

குருநாதரானவர், சீடனுக்கு அருள் செய்யும்பொழுது எப்படி வேண்டுமானாலும் அருள் செய்யலாம். அதாவது, சீடனை வெறும் தனது பார்வையினாலோ அல்லது சீடனைப் பற்றி நினைப்பதினாலோ அல்லது சீடனின் சரீரத்தைத் தொடுவதினாலோ அல்லது சீடனுக்கு அருள் செய்துவிட முடியும். இப்படி அருள் செய்வதைத்தான், 'நோக்கியே கருதி மெய் தாக்கியே' எனப் பிறிதொரு பாடலில் பகவான் ரமணர் குறிப்பிடுகின்றார்.

ஆக, மூன்று விதமாய் சீடனுக்கு, குரு அருள் செய்ய முடியும் என்று இருக்க, இப்பாடலில் பிரத்யேகமாய் ஸ்பரிச தீக்ஷையையே (தொட்டு அருள்புரிவதை) பெரிதாகச் சொல்கிறார். அதுவும், அத்தகைய விசேஷம் வாய்ந்ததுவே!

'தொட்டருள்' - தொட்டு அருள் செய் எனத் தெளிவாக உள்ளது. 'நட்டமாவேன்' - அப்படி தொடாவிடில், எனது வாழ்வு (ஜன்மம் எடுத்ததின் லக்ஷ்யம்) வீணாகும் என்று குறிக்கிறது.

பகவான் கிருஷ்ணன், கீதையில், தன்னை பூஜிப்பதற்கு சிறிது நீரோ, இலையோ, பழமோ போதும் என்கிறான். உண்மைதான். ஆக துளஸீ இலையையோ, வில்வ இலையையோ பகவானுக்கு அர்ப்பித்தால் அவன் சந்தோஷமடைகிறான் என்பதில், எள்ளளவும் ஐயமில்லை. ஆயின், ஒரு தனவான் இப்படிச் செய்வது முறையாகுமா? ஐச்வர்யம் இருக்கும் எனில், ஆடம்பரமின்றி, தக்கவாறு பகவானை பூஜிப்பது அல்லவா சரியாகும்! அதுபோல், பல்வேறு விதத்திலும், ஒருவனை, குருவும், இறைவனும் பரிபக்குவப்படுத்துவர் என்பது உண்மையே எனினும், உடல் என்று ஒன்று இருப்பதினால், இதை குருநாதர் தொட்டு அருள் செய்யட்டுமே! என்றும் பொருள்படுமாறு இருக்கிறது இப்பாடல்.

அப்படி பகவான் சரீரத்தைத் தொட்டுவிட்டால், எந்த உடம்பானது மல, மூத்திரங்களடங்கியது என்று வெறுத்து ஒதுங்கவேண்டி இருந்ததோ, அதுவே, 'பகவான் தொட்ட உடல்' என்று பிரியமாக மாறிவிடும்.

இந்த ஹஸ்த தீக்ஷையைப் பல மஹாத்மாக்கள் (தொடுவது) பல சமயங்களில் பிரயோகித்து உள்ளனர். இது சுலபத்தில் பயனளிக்கக் கூடியதாகும். பகவான் ரமணரும், தனது சீடர்களுக்கு சமயங்களில் தனது கைகளினால் தொட்டு அருள் பாலித்திருக்கிறார்.

காவ்யகண்ட கணபதிமுனி என்றொரு மிகச் சிறந்த சீடர் பகவான் ரமணருக்கு இருந்தார். 'நாயனா' என்று அனைவரும் இவரை பிரியமுடன் அழைப்பர். இவர்தான் முதன்முதலில் பகவானுக்கு 'ரமண மஹரிஷி' என்ற பெயரளித்து, உலகிற்கு தெரியப்படுத்தியவர்.

இவர், மாபெரும் தபஸ்வி. மந்திரங்களில் கைதேர்ந்தவர். இவரே ஸ்வயம் ஒரு மஹாத்மா. இவர் கவிப்புலமை பெற்று இருந்தார். அதனால்தான் 'காவ்ய கண்ட' என்ற நாமமும் கொண்டு இருந்தார்.

இவர் ஒருமுறை, விஸ்வநாத சாஸ்திரி என்பவரோடு சென்னையை அடுத்த திருவொற்றியூருக்கு விஜயம் செய்தார். அதுசமயம், அவர் அங்கு கோயில்கொண்டுள்ள அம்பிகையை, குழந்தையாகப் **பா**வித்து, ஸ்லோகங்கள் இயற்றிப் பாடினார். இக்காலத்தில்தான், இவருடைய தரிசனம், கபாலி சாஸ்திரி எனும் இவருடைய பிரதம சிஷ்யருக்கு கிட்டியது.

இப்படி வாழ்ந்து வரும் காலத்தில், இவருக்கு தவத்தில் ஈடுபடவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. ஆதலால், திருவொற்றியூரிலே இருந்த பாழடைந்த பிள்ளையார் கோயிலில் கடுமையான தவம் இயற்றினார். காலையில் இருந்து மாலை 6 மணி வரை ஒரு ஆகாரமும் எடுத்துக்கொள்ளாமல், தியானம் பயின்று, மாலை 6 மணிக்குமேல் பால் மட்டும் அருந்தி வந்தார். தனது தியானத்தையும், பகவான் ரமண மஹரிஷிகள் உபதேசித்த முறையில் செய்து வந்தார். இப்படி 18 நாட்கள் கழிந்தன.

18-ஆம் நாள் மதியம், இவர் அசதியினால் சிறிது படுத்து இருப்போம் என்று எண்ணி படுக்கலானார். அதேசமயம், திருவண்ணாமலை விரூபாக்ஷி குகையில் அமர்ந்து இருந்த ஸ்ரீ ரமண பகவானின் உடல் அப்படியே மேலே எழுந்தது. ஆகாய மார்க்கமாய் சென்ற அவர், திருவொற்றியூரை அடைந்து, காவ்யகண்ட கணபதிமுனி தவம் செய்து கொண்டிருந்த பிள்ளையார் கோயிலுக்குள் சென்று,

காவ்யகண்ட கணபதி முனிவரின் தலையில், தனது கரகமலத்தை வைத்து அருளினார். அப்படி வைத்தவுடன், மறுபடியும் ஆகாய மார்க்கமாய் திருவண்ணாமலை வந்து சேர்ந்துவிட்டார் ரமண பகவான். இப்படி பகவான் ரமணர் நேரில் வந்து அருளியதால் காவ்யகண்ட கணபதி முனிவர் தனது சாதனைகளில் பெரும் முன்னேற்றம் அடைந்தார். இவர் தமது வாழ்வில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்தவர்.

ஸ்ரீ ரமண பகவான், இச்சம்பவம் குறித்துப் பேசுகையில், 'சித்த புருஷர்கள் சரீரத்துடன் ஆகாய மார்க்கமாய் செல்வர் என்று கேள்விப்பட்டதுண்டு. அது இப்படித்தான் நடக்கும் போல் உள்ளது'' என்றார்.


ஸ்ரீ ரமண பகவான், தமது ஹஸ்ததீக்ஷையை (கைகளினால் தொட்டு) தன்னுடனேயே வாழ்ந்த பழனிஸ்வாமி, தனது தாயார், பசு லக்ஷ்மி போன்றோருக்கும் கொடுத்து விதேஹமுக்தி அளித்துள்ளார்.

(தொடரும்)


## அறிவிப்பு!

1995-ல் ஸ்தாபிக்கப்பட்டு, ஸாந்தீபனி குருகுலம் வேதபாடசாலை இன்றளவும், மதுரபுரி வளாகத்திலும், சென்னையில் உள்ள ஆலப்பாக்கத்திலும் நடந்து வருகின்றது. நம்முடைய பாரததேசத்தின் ஜீவனாக இருக்கக்கூடிய வேதத்தைக் காப்பாற்றுவதில் எல்லோருடைய பங்கும் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் விருப்பம். அதன்படி, ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் வீட்டிலுள்ள ஸ்வாமி படத்தின் முன்பாக ஒரு உண்டியல் வைக்கவும். அதன்மேல் ''**வேத நிதி**'' என்று எழுதி தினமும் அதில் ஒரு ரூபாய் போட்டு வரவும். ஒவ்வொரு வருடமும், டிசம்பர் 31-ந் தேதி அதில் சேர்ந்த பணத்தை எடுத்து **ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் (Sri Sandeepani Gurukula trust)** என்ற பெயருக்கு DD எடுத்து New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**- Trustees**



ஸ்ரீ ஸ்ரீ பஞ்சாபகேச ப்ரஹ்மேந்த்ராள்
(தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ Dr. S. பஞ்சாபகேச சாஸ்த்ரிகள்)

ஸ்ரீ ஹரி:

காஞ்சி மஹாபெரியவர், ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் ''தர்மாத்மா'' என்று பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்டவர், தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம மேலக்காவேரி ப்ரஹ்மஸ்ரீ Dr. S. பஞ்சாபகேச சாஸ்த்ரிகள். இவர், நம்முடைய சத்சங்கத்திலும் வந்து, உபந்யாசம் செய்துள்ளார்கள். மேலும், நம்முடைய சத்சங்கம் சார்பில் நடத்தப்பட்ட ஸதஸ்களிலும் கலந்துகொண்டுள்ளார்கள்.

மதுரமுரளியில் ஒவ்வொரு மாதமும், ''வேத கதைகள்'' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். அவர்களுக்கு நம்முடைய சத்சங்கத்தின் சார்பாக, ''வாங்முக ஸார்வபௌம'' என்ற பட்டமும் கொடுத்து கௌரவிக்கப்பட்டது. அன்னார் அவர்கள், மஹாசந்யாசம் பெற்று, *12-11-2005* அன்று கும்பகோணத்தில் விதேஹமுக்தி அடைந்தார். அவருடைய பிரிவால் வாடும் அவருடைய குடும்பத்தினருக்கு, பகவான் மனசாந்தியை தந்து அருள்புரிய ப்ரார்த்திக்கின்றோம்.

— R. **சிவராமன்**

# அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களுடன் சில வார்த்தைகள்

இதுநாள் வரையில், 1) ஸ்ரீ ஸாந்தீபனி குருகுல ட்ரஸ்ட், 2) குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், 3) சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா போன்றவைகளின் பதிவு அலுவலகமாக ''ப்ரேமிகபவனம்'' New No. 2, Old No. 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-83, செயல்பட்டு வந்தது. ஆனால், சில மாதங்களுக்கு முன்பாக எல்லாவற்றையும் No. 24-A, Mangai Street, Off : Pillayar Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083 என்ற முகவரிக்கு பதிவு அலுவலமாக மாற்றப்பட்டது.

மேற்படி விலாசம், பதிவு அலுவலமாக இருந்தபோதிலும், நிர்வாக அலுவலகம் (Administrative Office)

New No. 51, Old No. 24,
7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875

என்ற இடத்தில் விஜயதசமியிலிருந்து இயங்கி வருகிறது.

இந்த நிர்வாக அலுவலகம், காலை 8 மணி முதல் பிற்பகல் 12 மணி வரையிலும், மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்து இருக்கும். திரு. S. நடராஜன் என்பவர் இந்த அலுவலகத்திற்குப் பொறுப்பாளர் ஆவார்.

மதுரமுரளி சந்தாவை புதுப்பித்தல், மதுரமுரளி ஆயுள்சந்தா செலுத்துதல். தங்களுடைய விலாசம் மாறுதலைத் தெரிவித்தல், மதுரமுரளி பழைய ப்ரதிகளை கேட்டுப் பெறுதல், விளம்பரம் அறிவித்தல், மதுரமுரளியில் வெளியிடுவதற்கான விஷயங்களை அனுப்புதல் போன்றவற்றிற்கு, நேரிலோ, தொலைபேசியிலோ, கடிதம் மூலமாகவோ இந்த அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

சத்ஸங்கத்தின் நிகழ்ச்சிகள் விபரங்கள், ஸ்ரீ ஸ்வாமிஜி பங்கு பெறும் நிகழ்ச்சிகளின் விபரங்கள், ஸ்ரீ ஸ்வாமிஜியைப் பார்க்க விரும்புவோர், அதற்கான நேரத்தை தெரிந்துகொள்வதற்கு, மேற்படி அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம்.

நாம் செய்துவரும் தொண்டுகளில் பங்குபெற விரும்புபவர்கள், உதாரணமாக, வேத பாடசாலை, ஆலயத் திருப்பணி, ஆஸ்ரமம் மற்றும் பொதுத்தொண்டு இவற்றில் பங்குபெற விரும்புபவர்கள், மேற்படி அலுவலகத்தைத் தொடர்புகொண்டு அதற்கான விவரங்களைக் கேட்டறிந்து, தாங்களும், இயன்ற அளவில் பங்குகொள்ளலாம்.

**அப்படி நன்கொடை அளிக்க விரும்புபவர்கள், கண்டிப்பாக ரசீதைக் கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். ரசீது வரவில்லை என்றால், அதை தெரியப்படுத்திப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம்.**

எல்லா கடிதத்தொடர்புகளும் மேற்படி அலுவலகத்திற்குத்தான் (Administrative Office) அனுப்பவேண்டும். தங்களுடைய ஆன்மீகம் விஷயமான சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புபவர்கள், கடிதங்களை மேற்படி விலாசத்திற்கே அதை அனுப்பலாம். ஆனால் கடிதத்தின் மேல், "The Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்பதை மறக்காமல் குறிப்பிட வேண்டும். திருமண அழைப்பிதழ் மற்றும் ஆன்மிக சம்பந்தமான அழைப்பிதழ்கள் போன்றவற்றை இந்த அலுவலகத்திற்கு அனுப்பினால், அவைகள் ஸ்வாமிஜியின் பார்வைக்குக்கொண்டுச் செல்லப்பட்டு ப்ரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

இந்த அலுவலகத்தின் தொலைபேசி எண். 044-24895875. இங்கு Fax வசதியும் உண்டு. email ID Contact@madhuramurali.org மேற்படி தகவல்களுக்காக வேறு யாரையும் தொடர்புகொள்ள வேண்டாம். உபன்யாச கேசட்டுகள் மற்றும் மிஷன் வெளியீடு புத்தகங்கள், கோபி சந்தனம், துளசி மாலை, பெருமாள் திருப்படங்கள், போன்றவை மேற்படி அலுவலகத்தில் கிடைக்கும்.

நமது ''மதுரபுரி'' ஆஸ்ரமத்திலும், மற்றும் இதர ஸ்தாபனத்திலும் முழுநேரமாக தங்கி, ஆன்மிக சாதனைகள் செய்து வருபவர்கள் ஒருவரும் கிடையாது. நமது ''மதுரபுரி'' ஆஸ்ரம வளாகத்தில், பாடசாலை இயங்கி வருகிறது. பகவானுக்கு பூஜைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இவற்றைக் கவனித்துக் கொள்பவர்கள் மட்டுமே அங்கு தங்குகிறார்கள். அதாவது, பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர், படிக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களுடைய உணவுத் தேவைகளைக் கவனித்துக் கொள்பவர்கள், பெருமாள் பூஜையைப் பார்த்துக் கொள்பவர்கள் மட்டுமே, முழுநேரமாக அங்கு தங்கி உள்ளனர்.

# செய்திகள்

### நவம்பர் 1-ஆம் தேதி

மதுரபுரியில், ஸ்ரீ ஸ்வாமிஜி, ஸ்ரீ சாந்தீபனி குருகுல வித்யார்த்திகளுடன் தீபாவளியைக் கொண்டாடினார்கள்.

### நவம்பர் 2-ஆம் தேதி - ஐப்பசி ஸ்வாதீ - ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தி

காலையில், ஸ்ரீ ஸ்வாமிஜி, மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம், பூஜை செய்தார்கள். ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் ஹோமங்கள் நடைபெற்றன. மாலையில், ஸ்ரீ ப்ரேமிகவரதன் ஸந்நிதியில், ஸ்ரீமதி ஸ்ரீகலாபரத் அவர்களின் சிஷ்யை சௌ. ச்ருதிகல்யாணசுந்தரம் அவர்களின் நாட்டிய நிகழ்ச்சி, ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

இரவில், மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன், யானை வாஹனத்தில் புறப்பாடும், திவ்யநாமகீர்த்தனமும் நடைபெற்றன. இதேபோல், பல இடங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தி கொண்டாடப்பட்டது.

### நவம்பர் 6-ஆம் தேதி

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தியை ஒட்டி, ஆம்பூர் ஆன்மீக பேரவை சார்பில், ஆம்பூர், க்ருஷ்ணாபுரம், அருள்மிகு அலர்மேல் மங்கை சமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலில் காலை விசேஷ திருமஞ்ஜனமும், பகல் 12 மணிக்கு, ஆயிரம் பேருக்கு அன்னதானமும், மாலையில் மஹாமந்திர கீர்த்தனமும் நடைபெற்றன. ஸ்ரீ ஸ்வாமிஜி, மாலை 6 மணியளவில் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

### நவம்பர் 12-ஆம் தேதி

ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி, மதுரபுரியில், காலையில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்ஜனம், பூஜை செய்தார்கள்.

### நவம்பர் 13-ஆம் தேதி-ப்ருந்தாவன த்வாதசி

மதுரபுரியில் துளஸீகல்யாணம் நடைபெற்றது. இரவு 7 மணிக்கு துளஸீமாடம் சுற்றிலும் வகைவகையான விளக்குகள் ஏற்றப்பட்டு, வேதமந்திரம், அஷ்டபதி பஜனை, நாமகீர்த்தனத்துடன் துளஸீகல்யாணம் நடைபெற்றது.

### நவம்பர் 24-ஆம் தேதி, 25-ஆம் தேதி

சென்னை, மயிலாப்பூர் திரு. A. வெங்கடரமணி அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற திவ்யநாமகீர்த்தனம், ராதாகல்யாணம் வைபவங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

### நவம்பர் 27-ஆம் தேதி

ஏகாதசியை முன்னிட்டு, காலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி, மதுரபுரியில், மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்ஜனம், பூஜை செய்தார்கள். சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திவ்யநாம பஜனை நடைபெற்றது.

---

### ப்ரேமிகவரதன் மருத்துவமுகாம், மதுரபுரி

ப்ரேமிகவரதன் மருத்துவமுகாம் சார்பில், மதுரபுரியில், நவம்பர் 13-ஆம் தேதி, மகப்பேறு மருத்துவம் பற்றி, Dr. கீதா அவர்கள் தலைமையில், சிறப்பு முகாம் ஒன்று நடத்தப்பட்டது. இந்த முகாமில் கலந்துகொண்ட பெண்களுக்குத் தேவையான பரிசோதனைகளை, சென்னை, போரூர், ராமச்சந்திரா மருத்துவ கல்லூரி/மருத்துவமனை இலவசமாக செய்து கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

Dr. கீதா மற்றும் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ கல்லூரி/மருத்துவமனைக்கு நமது அறக்கட்டளை சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ ஹரி :

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

| | |
|---|---|
| 10-12-2005 மாலை | அருளுரை<br>இடம் : பெசன்ட்நகர், ஊரூர்குப்பம், சென்னை |
| 11-12-2005 காலை | சாலமங்கலம் கோவில் கும்பாபிஷேகம், படப்பை |
| 12-12-2005 மாலை | கங்காபுரம் கோவில், ஆம்பூர் |
| 15-12-2005 மாலை | விஷ்ணு தீபம்<br>இடம் : மதுரபுரி |
| 24-12-2005 - 25-12-2005 இரவு 7-9 | உபன்யாசம்<br>இடம் : Tirumala Tirupathi Devasthanam, Information Centre, Venkatnarayana Road, T. Nagar, Chennai - 17. |
| 31-12-2005 08-01-2006 இரவு 7-9 | க்ஷிப்ர ப்ரஸாத கணபதி ட்ரஸ்ட் சார்பில் உபன்யாசம்<br>இடம் : Hindi Prachar Sabha, T. Nagar, Chennai - 600 017. |
| 10-01-2006 | வைகுண்ட ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம். |

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24,
7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875
email ID : contact@madhuramurali.org

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

**மங்களானி பவந்து**